# ஜூலையில் 28.17 லட்சம் பேர் மெட்ரோ ரயிலில் பயணம்



**சென்னை, ஆக. 2–**
மெட்ரோ ரயிலில், கடந்த ஒரே மாதத்தில், 28.17 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. 2015ல், ஆலந்துார் – கோயம்பேடு வரை, மெட்ரோ ரயில் போக்குவரத்து துவங்கிய போது, தினமும், 10 ஆயிரம் பேர் பயணித்தனர்.

## 50,000 பேர்

அதன் பின், விமான நிலையம் – கோயம்பேடு மற்றும், நேருபூங்கா, விமான நிலையம் – சின்னமலை மற்றும், தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரை நீட்டிக்கப்பட்ட போது, தினமும், 50 ஆயிரம் பயணியர் வரை, பயணித்தனர்.

பிப்ரவரியில், விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் வரை, போக்குவரத்து நீட்டிக்கப்பட்ட பின், பயணியர் வருகை, தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

பிப்ரவரியில், 23.62 லட்சம்; மார்ச்சில், 23.68 லட்சம்; ஏப்ரலில், 24.30 லட்சம்; மே, 24.49 லட்சம்; ஜூனில், 24.95 லட்சம் பேர், மெட்ரோ ரயிலில் பயணித்துள்ளனர்.

ஜூலையில், பயணியர் போக்குவரத்து மேலும் அதிகரித்து, 28 லட்சத்து, 17 ஆயிரத்து, 224 பேர் பயணித்துள்ளனர்.

இது குறித்து, மெட்ரோ ரயில் வர்த்தக பிரிவு அதிகாரி ஒருவர் கூறியதாவது:

மெட்ரோ ரயிலில், பயணம் செய்யும் பயணியர், நிலையத்தில் இறங்கியதும், செல்ல வேண்டிய இடங்களுக்கு, உடனடியாக செல்ல ஏதுவாக, குறிப்பிட்ட நிலையங்களில், குறைந்த கட்டணங்களில், ஷேர் ஆட்டோ, டாக்சி, வேன், சிற்றுந்துகள், இருசக்கர வாகனங்கள் மற்றும் வாடகை இல்லா சைக்கிள் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

## எதிர்பார்ப்பு

இவ்வசதிகளாலும், மெட்ரோ ரயிலில், தொடர்ந்து பயணியர் வருகை அதிகரித்துள்ளது. நகரில், போக்குவரத்து நெரிசல் மற்றும் மழை நாட்கள் மற்றும் விசேஷ நாட்களில், பயணியர் வருகை, ஒரு லட்சத்தை தாண்டியுள்ளது.

மெட்ரோ ரயில் பயணத்தில், விரைவான, பாதுகாப்பான, அமைதியான பயணம் மற்றும் நேரம் தவறாமையால், பயணியர் வருகை அதிகரித்துள்ளது.

வழக்கமாக வரும் பயணியர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், இவ்வாண்டு இறுதிக்குள், பயணியர் போக்குவரத்து, தினமும், 1.30 லட்சத்தில் இருந்து, 1.50 லட்சம் வரை உயரலாம் என, எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு, அவர் கூறினார்.